CENTRE FOR WOMEN AND DEVELOPMENT

ANNUAL REPORT

2018



CENTRE FOR WOMEN AND DEVELOPMENT

2018

CENTRE FOR WOMEN AND DEVELOPMENT

NO – 07,RATNAM LANE,

K.K.S ROAD,

JAFFNA

TEL 1 – 021 – 222 – 4398

OFFICE : cwdjaffna@gmail.com

WEB : www.cwdjaffna.org

ஆண்டறிக்கை - 2018



மகளிர் சுதந்திரமாக வகையில் கட்சி அமைப்பாக 1988 ஆரம்பிக்கப்பட்ட இவ்வமைப்பு இயங்குவதற்கான செயலகத்தில் செய்யப்பட்ட அபிவிருத்தி நிலையம் இயங்கக் கூடிய சார்பற்ற, அரச சார்பற்ற ஒக்டோபர் 18ம் திகதி அமைப்பாகும். தேசிய ரீதியில் கொழும்பு அரச சார்பற்ற சட்ட ரீதியில் பதிவு அமைப்பாகும்.

1988 ஆம் ஆண்டிலிருந்து எமது நிறுவனம் பெண்கள் மற்றும் சிறுவர்களின் நலனை மேம்படுத்தும் முகமாகவும், அவர்களிற்கேற்படும் பிரச்சனைகளை சுலபமாக தீர்ப்பதற்கேற்ற வகையில் தீர்வு முன்மொழிவுகளை முன்வைப்பதிலும், தொலைநோக்கு பார்வையுடன் செயற்பட்டு இன்றும் தடமாறாமல் நிலைத்து நிற்கின்றது. பெண்களுக்கு இயலுமான வழியிலும் நற்பயனை கொண்ட செயல்களை தொடர்ந்தும் எமது தன்னார்வ தொண்டு நிறுவனம் செய்து வருகின்றது. அதிலும் பெண் தலைமைத்துவக் குடும்பங்களை தலைகாக்கும் கடமை போன்று அவர்களின் முன்னேற்றத்தை நோக்கமாகக் கொண்டு அவர்களின் வாழ்வாதாரத்தை மேம்படுத்தி வருகின்றது. பெண்கள் சிறுவர்களுக்கான தேவைகளை இனம் கண்டு அவர்கள் உரிமைகளோடு ஒன்றிணைந்து பெறுவதற்கான முன்னெடுப்புக்களை மகளிர் அபிவிருத்தி நிலையம் தொடர்ச்சியாக மேற்கொண்டு வருகின்றது.

சிதைவடைந்த மக்கள் மனங்களோடு வாழ்வின் அடுத்த படி நிலையை தொடர்ந்து ஊடுருவ வழிகாட்டியாகவும், வாழ்க்கைதரத்தின் மாற்றங்களை மாற்றியமைத்து வாழ்வதற்கான தகுதியை பெற்றுக் கொடுக்கின்றது. தடம்மாறிய சிறுவர்களின் கல்வி வளர்ச்சிக்கு முன்னின்று செயற்பட்டுவருகின்றது. பெண்தலைமைத்துவ குடும்பங்களின் வாழ்வாதாரத்திலும், திறன் மேம்பாட்டிலும் மேன்மையுற வழிகாட்டுவதில் முக்கிய நோக்காகவும், அதைவிட மாற்றத்தினை ஏற்படுத்தக்கூடிய சகல வேலைத்திட்டங்களையும் செயற்படுத்திவருகின்றது.

இங்கு செயற்படுத்தப்படும் ஒவ்வொரு செயற்பாடுகளும் குடும்ப, சமூக, கிராம, நகர ரீதியாக வகைப்படுத்தப்பட்டு வாழ்வாதாரத்தை மேம்படுத்துவதுடன், அரசியலில் பெண்கள் பங்கு கொள்வதற்கு அவர்களின் கீழ் மட்ட அறிவு நிலையை போக்கி அவர்களிற்கான மாற்றத்தினை திசைதிருப்பி அரசியலில் பங்கு பற்றுவதற்கான செயற்பாடுகளையும், அரசியலில் வரக்கூடிய உரிமை பெண்களுக்கு உண்டு என்பதனையும் ஆணித்தரமாக கூறுவதுடன், ஆழமான அரசியலின் மாற்றங்கள் பெண்களாளே உருவாக்கி கொள்ள முடியும் என்ற நம்பிக்கையை பெண்கள் மத்தியில் நிலைநிறுத்தும் நோக்கில் எமது நிறுவனம் செயற்பட்டு வருகின்றது.

பெண்கள் அரசியலில் ஈடுபட வேண்டும் என்ற கருத்தை நிலை நிறுத்த வேண்டுமானால் அவர்கள் தலைமையில் அரசியற் கட்சியொன்று உருவாக்கப்பட வேண்டும். இன்று செயற்பட்டுக் கொண்டிருக்கின்ற எந்தவொரு அரசியற் கட்சியும் பெண்களால் உருவாக்கப்பட்டவை அல்ல என்பதால் பெண்களை கொண்ட பலமான ஓர் கட்சியை உருவாக்கும் நோக்கில் எமது மகளிர் அபிவிருத்தி நிலைய பணிப்பாளர் சரோஜா சிவசந்திரனால் முயற்சியெடுக்கப்பட்டு வருகின்றமை இங்கு குறிப்பிடதக்க விடயமாகும்.

இலக்கு

பெண்களை தனிப்பட்ட, சமூக, பொருளாதார, அரசியல், ரீதியில் அபிவிருத்தி செய்வதும் தொடர்ந்து ஊக்கப்படுத்தலுமே எமது நிறுவனத்தின் இலக்காக அமைந்துள்ளது.

குறிக்கோள்

→ மகளிர் குழுக்களை வலுவூட்டும் வள நிறுவனமாக இருத்தல்
→ பெண்களினதும் மிள்குடியமர்ந்த மக்களினதும் சமூகப்பொருளாதார அரசியல்களை முன்னேற்றுதல்
→ பெண்தலைமைத்துவ குடும்பங்கள் தொடர்பான தகவல்களைத் திரட்டுதல்
→ அரசியல் செயற்பாடுகள் ரீதியில் பெண்களை ஊக்கப்படுத்தல்
→ பெண்கள் தொடர்பாக மாவட்ட, மாகாண ரீதியில் வலையமைப்புக்களை உருவாக்குதல்
→ அடிப்படை வசதி குறைந்த மாணவர்களின் கல்வி செயற்பாடுகளை கருத்தில் கொள்ளல்
→ தேசிய மட்ட ரீதியில் பெண்கள் அமைப்புக்களின் கொள்கைகளை பரிசிலனை செய்தலும், வலுப்படுத்தலும்
→ இலவச சட்ட ஆலோசனைகளை வழங்குதல்
→ அனைத்து பெண்களையும் முடிந்தவரை அபிவிருத்தி நோக்கில் செயற்பட வைத்தல்



மகளிர் அபிவிருத்தி நிலைய செயற்பாடுகள் - 2018

வாழ்வாதார உதவி வழங்கள்

வவுனியா	-	21 பயனாளிகள்
துணுக்காய்	-	21 பயனாளிகள்
வன்னிவிளான்குளம்	-	25 பயனாளிகள்
கன்னாதிட்டி மாதர் சங்கம்	-	21 பயனாளிகள்
சிவபுரம், கிளிநொச்சி	-	21 பயனாளிகள்
வேரவில், மன்னார்	-	21 பயனாளிகள்

- **தேக்கவத்தை வவுனியா மாதர் சங்கத்தில் 17.02.2018 ஆம் திகதி 21 பயனாளிகளுக்கு சுயதொழிலை ஊக்குவிப்பதற்காக தேவையான உபகரணங்களும் மற்றும் பொருட்களும் வழங்கப்பட்டது.**

வகைப்படுத்தப்பட்ட சுய தொழில்கள்

- உணவு உற்பத்திக்கான பொருட்கள் வழங்கப்பட்டது
- ஊதுபத்தி உற்பத்திக்கான பொருட்கள் வழங்கப்பட்டது
- சிறுகடை வியாபாரத்திற்கான பொருட்கள் வழங்கப்பட்டது
- தையல் தொழிலுக்கான பொருட்கள் வழங்கப்பட்டது
- கோழி வளர்ப்பிற்காக நிதி கையளிக்கப்பட்டது









- துணுக்காய், மாங்குளத்தில் கணவரை இழந்தோரின் சங்கத்தில் 21 குடும்பத்தின் சுயதொழில் முன்னேற்றத்திற்காக கூழற்சிமுறை கடன் அடிப்படையில் வாழ்வாதார உதவிகள் 27.04.2018 இல் வழங்கப்பட்டது.

வகைப்படுத்தப்பட்ட சுய தொழில்கள்


- கோழி வளர்ப்பிற்காக கோழிகள் வழங்கப்பட்டது
- தோட்டத் தொழிலுக்காக மருந்தடிக்கும் பம் வழங்கப்பட்டது
- வீட்டின் திருத்தத்திற்காக சிறு தொகை நிதி வழங்கப்பட்டது
- உணவு உற்பத்தி செய்வதற்காக பொருட்கள் வழங்கப்பட்டது
- பாரம்பரிய மருத்துவகைகளின் உற்பத்தியை மேன்மைப்படுத்த நிதி வழங்கப்பட்டது
- சிறுகடை தொழிலுக்கான பொருட்கள் வழங்கப்பட்டது.





- துணுக்காய், வள்ளிவிலாங்குளம் என்ற இடத்தில் கணவரை இழந்தோரின் சங்கத்தில் 25 குடும்பத்தின் சுயதொழில் முன்னேற்றத்திற்காக சுழற்சிமுறை கடன் அடிப்படையில் வாழ்வாதார உதவிகள் 27.07.2018 இல் வழங்கப்பட்டது.





- துணுக்காய், வள்ளிவிலாங்குளம் என்ற இடத்தில் தாய் தகப்பன் அற்ற பாடசாலை மாணவர்களுக்கு கல்வி உபகரணங்கள் வழங்கப்பட்டது.





- கல்லாதிட்டி மாதர் சங்கத்தில் வசிக்கும் 21 பயனாளிகளுக்கு சுய தொழிலை மேம்படுத்துவதற்காக பொருட்களும், உபகரணங்களும், நிதி உதவிகளும் வழங்கப்பட்டது.

வகைப்படுத்தப்பட்ட சுய தொழில்கள்


- அப்பள உற்பத்திக்கான பொருட்கள் வழங்கப்பட்டது
- தையல் தொழிலுக்கான பொருட்கள் வழங்கப்பட்டது
- மெழுகுதிரி உற்பத்திக்கான பொருட்கள் வழங்கப்பட்டது
- சிறுகடை வியாபாரத்திற்கான பொருட்கள் வழங்கப்பட்டது
- உணவு உற்பத்திக்கான பொருட்கள் வழங்கப்பட்டது
- கோழி வளர்ப்பிற்காக கோழி வழங்கப்பட்டது
- தோல் பை தயாரிப்பிற்கான பொருட்கள் வழங்கப்பட்டது.











குடும்பத் தலைமைத்துவ பெண்ணின் வாழ்வாதாரத்தை மேம்படுத்தும் நோக்கில்
உற்பத்திக்கான பொருட்கள் எமது மகளிர் அபிவிருத்தி நிலையத்தால் வழங்கப்பட்டது.












தொழில் பயிற்சிகளை வழங்கல்

- மகளிர் அபிவிருத்தி நிலையத்தினால் 12.02.2018 தொடக்கம் 16.02.2018 வரை வாழ்த்துமடல் தயாரித்தல் தொடர்பான பயிற்சி 121, 2ஆம் குறுக்குத்தெரு யாழ்ப்பாணம் என்ற மகளிர் அபிவிருத்தி நிலைய மாநாட்டு மண்டபத்தில் நடைபெற்றது. இங்கு பயிற்சியளிப்பவராக துரைசிங்கம் தேனுகா என்பவர் 18 பயனாளிகளுக்கு பயிற்சியை வழங்கியிருந்தார். அவரின் திறமையும் ஆற்றலும் இங்கு குறிப்பிடத்தக்க விடயமாகும்.









- அதனைத் தொடர்ந்து, 12.02.2018 தொடக்கம் 16.02.2018 வரை சிரட்டையிலான கைவினைப் பொருட்களைத் தயாரித்தல் தொடர்பான பயிற்சி நெறி கோப்பாய் நிலையத்திலுள்ள பயிற்றுவிப்பாளர் தம்பிராசா சுரேஸ்குமார் என்பவரால் 20 பயனாளிகளுக்கு பயிற்சிகள் வழங்கப்பட்டது.









- புங்குடுதீவு பிரதேச சபையில் உள்ள பற்றிக் நிறுவனத்தில் அங்குள்ள 20 பயனாளிகளை மேலும் ஊக்கப்படுத்தும் வகையில் 15.02.2018 தொடக்கம் 24.02.2018 வரை டி.சில்வா சசீமா என்பவரால் பயிற்சி சிறப்பாக வழங்கப்பட்டது.














சுயதொழிலை ஊக்குவிக்கும் நோக்குடனும் , உள்நாட்டு சிறுகைத்தொழிலில்கள் மற்றும் உள்நாட்டு உற்பத்திகளால் நாளைய சந்தைவாய்ப்புக்களும், அதன் முன்னேற்றங்களுடாக சுற்றுலாத்துறைகளின் வளர்ச்சி பெருமளவில் உயரப்படும் என்பதனை இலக்காக கொண்டு எமது மகளிர் அபிவிருத்தி நிலையமும் கனேடிய உலகப் பல்கலைக்கழக சேவை நிலையமும் இணைந்து இப்பயிற்சி நெறியை நடாத்தியது. மற்றும் எமது மகளிர் அபிவிருத்தி நிலைய பணிப்பாளர் சரோஜா சிவசந்திரனால் மேற்கொள்ளப்பட்டு வருகின்ற பல சுயதொழிலை உருவாக்கும் முயற்சிகளில் சிலதாகும்.

- பொன்னாலை பாபூஜி சனசமூக நிலையத்தில் 18.03.2018 அன்று நடைபெற்ற மகளிர் தினத்தின் போது கௌரவ விருந்தினராக அழைக்கப்பட்டதுடன், எமது பணிப்பாளரால் அறநெறி பாடசாலை மாணவர்களுக்கு கல்விக்கான உபகரணங்களும் வழங்கப்பட்டன.





- எமது மகளிர் அபிவிருத்தி நிலைய பணிப்பாளர் சரோஜா சிவசந்திரன், மற்றும் மகளிர் அபிவிருத்தி நிலையத்தின் உறுப்பினர் விமலேஸ்வரி சிறிகாந்தகுபன் மற்றும் யூடி டுபாஸ் ஆகியோரின் ஜெனிவா பயணம்



சர்வதேச மகளிர் தினம் - 2018



" **WOMEN BOLD TOGETHER** " என்ற தொனிப்பொருளில் சர்வதேச மகளிர் தினம் எமது மகளிர் அபிவிருத்தி நிலையத்தினால் 31.03.2018 அன்று பற்றிக் நிலையம், 1ம்,வட்டாரம், புங்குடுதீவில் காலை 9.30 மணிக்கு ஆரம்பிக்கப்பட்டு மிகவும் சிறப்பாக நடைபெற்றது.

எமது மகளிர் அபிவிருத்தி நிலையம் சர்வதேச மகளிர் தினத்தை கொண்டாடுவது மட்டுமின்றி பற்றிக் நிறவனத்தினால் தயாரிக்கப்பட்ட பற்றிக் ஆடைகளை கண்காட்சிப்படுத்துவதையும், உள்ளூர் உற்பத்தியான பற்றிக் ஆடைகளின் விற்பனையை அதிகரிப்பதையும் முக்கிய நோக்கமாகக் கொண்டு இந்த 2018 ஆண்டு சர்வதேச மகளிர் தினம் புங்குடுதீவில் கொண்டாடப்பட்டது.

இங்கு பிரதம விருந்தினராக யமுனாதேவி பொன்னம்பலம் (அறங்காவலர், இலங்கை, சர்வோதயம்) மற்றும் இவ்விழாவை முன்னின்று நடாத்துவதற்காக கோசலை மதன் (சிரேஷ்ட விரிவுரையாளர், யாழ்/பல்கலைக்கழகம்) மதினி நெல்சன் (நகர சபை உறுப்பினர், பருத்தித்துறை) மாலினி அஜந்தன் (அறிவிப்பாளர், டான் தொலைக்காட்சி) திரு.எஸ்.கனகரட்ணம் (அதிபர், புங்குடுதீவு மகா வித்தியாலம்) மற்றும் மத்திய உத்தியோகத்தர்) அவர்களும் எஸ்.தபேசன் (அபிவிருத்தி மகளிர் அபிவிருத்தி நிலைய வரவேற்றகப்பட்டிருந்தனர். எமது சிவசந்திரன் தலைமையில் பணிப்பாளர் சரோஜா நடைபெற்றது. இவ்விழா சிறப்புடன்



நடனத்தை புங்குடுதீவு மகா மற்றும் வரவேற்பு பாம்பாட்ட நடனத்தை புங்குடுதீவு வித்தியாலய மாணவியும், மிகவும் சிறப்பாகவம் மகளிர் வித்தியாலய மாணவியும், கலைநயத்துடனும் ஆடியிருந்தனர்.

எஸ்.சர்லா என்பவரால் சர்வதேச மளிர் தினம் என்ற தலைப்பில் உரை நிகழ்த்தப்பட்டது. பெண் அடிமை என்ற கவிதையை புங்குடுதீவு மாணவியால் பெண்ணிற்கான சிறப்பின் உருப்படிகள் மிகஅழகுடன் வாசிக்கப்பட்டது. அதனைத் தொடர்ந்து பற்றிக் நிறுவனத்தினால் உற்பத்தி செய்யப்பட்ட ஆடைகளின் கண்காட்சியும், விற்பனையும் நடைபெற்று 3.00 மணியளவில் விழா இனிது நிறைவு பெற்றது.





அரசியலில் பெண்களின் வகிபாகம்

இலங்கையில் பெண்கள் 52 விதத்தினராக இருக்கும் போது இந்தச் சனத்தொகையினை ஆளுகின்ற அதற்கான முடிவுகளை எட்டுகின்ற நிலைகளில் பெண்கள் வெறும் 5 சதவீதம் தான் பங்களிப்புச் செய்கின்றனர். போருக்குப் பின்னரான காலப் பகுதியானது அதிகமாகப் பெண்களை மையப்படுத்தியதாகவுள்ளது. இழப்பைச் சந்தித்த பெண்களின் கையில் குடும்பத்தை கட்டியெழுப்பும் பொறுப்பும் சுமையாகியது.



பெண்கள் ஆண்களில் இருந்து வேறுபட்டவர்கள். அந்த வகையில் முடிவெடுக்கும் இடங்களில் கொள்கைகளை உருவாக்கும் நிலைகளிலும், தீர்மானங்களை மாற்றியமைக்கும் நிலைகளிலும், பெண்களின் தேவைகளின் நோக்கம் வேறுபட்ட விதத்தில் மிக்க பயனுள்ளதாகவும், சிக்கனமாகவும் அமையும். இது ஆண் - பெண் இணைந்த சமூகத்தை நன்கு பிரதிபலிப்பதாக காட்டுகின்றது.

பெண்கள் அரசியலில் பங்குபற்ற வேண்டும் என்ற நிலைப்பாடு காலாகாலமாக இடம்பெற்றிருந்த போதிலும் அவர்களது நேரடியான பங்களிப்பு பாராளுமன்றிலோ, உள்ளூராட்சி சபைகளிலோ குறைவானதாகவே காணப்படுகின்றது.

பெண்கள் உயர்பதவிகளை பெற்றுக்கொள்ளுதல், போர்க்கால சூழலில் பெண்கள் பாதுகாப்பு, அரசியலில் அவர்களது பங்களிப்பைக் கூட்டுதல் என்பன பெண்கள் அமைப்புக்களின் செயற்பாடுகளில் ஓர் திசை திருப்பிய மாற்றமாக மாற்றங்கள் ஏற்பட்டு வருகின்றன.

இம் மாற்றங்கள் பெண்களின் வாழ்வில் மட்டமல்லாது சமூகத்தின் மேம்படுத்தலுக்கும் அப்பால் ஈர்ப்பு சக்தியாக அனைத்து விதமான செயற்பாடுகளையும் முடியாது என்றில்லாமல் பெண்களால் மாற்றமுடியும் என்ற தன்மையை ஏற்படுத்தி வருகின்றது. '' பாலில் தண்ணீர் கலந்தது '' போல் பெண்களிடம் ஒழிந்திருக்கும் திறமைகளும், மழுங்கடிக்கப்பட்ட சமூக சீர்கெட்ட சிந்தனைகளும் மறைந்து கொண்டு போவதையும் தற்காலத்தில் இணங்கான முடிகின்றது.

அந்த காலத்தில் ஆணின் ஆதிக்கம் பணம் என்ற போர்வையால் மட்டுமே பெண் அடிமை தோன்றியது எனலாம். ஆனால் இந்தக்காலம் பெண்களின் கைகளில் பணபுழக்கமானது பெருகுவதால் பெண்ணடிமை மறைந்து செல்லப்படுவதும் அவர்களின் சுதந்திரமான செயற்பாடுகளாலும், இராஜதந்திர தீர்மானங்களாலும், உலகமயமாக்கலில் பெண்களின் வளர்ச்சியும் செழிப்புற்று வருகின்றது.

மகளிர் அபிவிருத்தி நிலையத்தினால் அரசியலில் பெண்கள் பங்குபற்றுதலை ஊக்குவிக்கும் வகையில் '' **பெண்கள் அரசியல் செயலணி** '' என்ற தனிப்பட்ட பிரிவாக அமுலாக்கி பெண்களின் அரசியல் பிரவேசத்தை அதிகரித்து வருகின்றது.

அரசியலின் முதற்படியாக உள்ளூராட்சி மன்றங்களில் பெண்கள் போட்டியிடுவதற்கான ஓர் தளத்தை ஏற்படுத்தும் வகையில் வடமாகாணத்தில் உள்ள **யாழ்ப்பாணம் , கிளிநொச்சி, முல்லைத்தீவு, மன்னார், வவுனியா** ஆகிய ஐந்து மாவட்டங்களிலும் அரசியலில் பங்குபற்றுவதற்கான தலைமைத்துவ பயிற்சி நெறியை வழங்கிவருகின்றது.

மேலும், உள்ளூராட்சித் தேர்தலில் பங்கு பற்றும் பெண்கள் அரசியல் கட்சிகளில் நிலைத்து நிற்பதற்கான செயற்பாடுகளையும், சந்தர்ப்பங்களையும் மகளிர் அபிவிருத்தி நிலையம் ஏற்படுத்தி வருகின்றது.

ஆயினும், பெண்கள் அரசியலில் பங்குபற்றுதல் முக்கியமான விடயமாகவும், பொருளாதார பிரச்சனைகளுக்கான தீர்மானங்களை மாற்றியமைக்கும் நுட்ப நுண்ணிறிவினையும் கொண்டமைந்த தேர்தல் உத்திகளே இலங்கையின் பொருளாதார வளர்ச்சியில் மாற்றத்தை ஏற்படுத்தும்.

சரோஜா சிவச்சந்திரன்

நிர்வாகப் பணிப்பாளர்

மகளிர் அபிவிருத்தி நிலையம்

